செ.வெ. எண்: 202 நாள்: 16–03–2012

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுக்காவில் உள்ள புதுவாயில் கிராமம் மற்றும் பொன்னேரி தாலுக்காவில் உள்ள பெரியகாவனம் மற்றும் ஏலியம்பேடு கிராமங்களில் சில நபர்கள் நிலங்களை வாங்கி அதில் டிட்கோ என்ற வாசகம் பொருந்திய பெயர் பலகைகளை வைத்துள்ளனர் என எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. இவ்வாறு வைக்கப்பட்டுள்ள பெயர் பலகைகள் அருகிலுள்ள நில உரிமையாளர்களையும் பொதுமக்களையும், இந்நிலங்கள் தமிழக அரசு நிறுவனமான, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (TIDCO) உரியது என்ற தோற்றத்தை கொடுக்கிறது. டிட்கோ நிறுவனம் இதுபோன்ற பெயர் பலகைகளை வைப்பதற்கோ அல்லது எந்த நிலத்தையும் தனக்காகவோ, தனது திட்டங்களுக்காகவோ வாங்குவதற்கு எந்த ஒரு நபருக்கும் அதிகாரம் வழங்கவில்லை.

டிட்கோ நிறுவனம் மேலே குறிப்பிட்டுள்ள கிராமங்களில் உள்ள எந்த நிலத்தையும் வாங்கவோ அல்லது கையகப்படுத்தவோ இல்லை என்றும் மேலும் இவ்வகை பெயர் பலகைகளை வைத்திருப்பதற்கு டிட்கோ நிறுவனம் பொறுப்பில்லை என்றும் தெளிவுப்படுத்துகிறது. இதுபோன்ற பெயர் பலகைகளை வைத்து தவறாக வழி நடத்துதல், தவறான தகவல்களை தரும் எந்த ஒரு நபரையும் நம்பி பொது மக்கள் ஏமாற வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகின்றனர். மேலே குறிப்பிட்டது போன்ற தவறான முறையில் பெயர் பலகைகளை வைப்பது சட்டப்படி நடவடிக்கைக்குரியச் செயலாகும்.

முதன்மை செயலர் /
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்

btëpL: -

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.